# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 355 | 4 Pages | 17.7.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 355 | 4 பக்கங்கள் | 17.7.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## பெண்களுக்கு ஆலோசனை வழங்கி ரூ.163 கோடி சம்பாதிக்கும் பிரபலம்

அமெரிக்கா, ஜூலை 17

சமூக வலைதளங்கள் பொழுதுபோக்கு தளமாக மட்டுமல்லாமல், சிலருக்கு பணம் ஈட்டித்தரும் தளமாகவும் விளங்குகிறது. அந்த வகையில் சீனாவை சேர்ந்த ஒருவர் சமூக வலைதளங்களில் பெண்களுக்கு ஆலோசனைகள் கூறி ஆண்டுக்கு ரூ.163 கோடி சம்பாதிக்கிறார். ஆனால் இவர் கூறும் ஆலோசனைகள் சர்ச்சையாக உள்ளது.

அதாவது பணக்கார ஆண்களை திருமணம் செய்வது எப்படி? என்பது குறித்து பெண்களுக்கு இவர் சமூக வலைதளங்கள் மூலம் பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார். க்யூ குவின் என்ற பெயர் கொண்ட இவர், காதல் உறவுகளை கையாள்வது குறித்து சர்ச்சை கருத்துக்களை வழங்குவதாக கூறப்படுகிறது.

திருமணம் செய்வதை கோட்டைக்குள் செல்வது என்றும், பணத்தை அரிசி என்றும், கர்ப்பத்தை பந்தை சுமப்பது என்றும் குறிப்பிடும் இவர், உறவுகளை மதிப்பதில்லை. ஆனாலும் இவரை கலந்து ஆலோசிக்க பெண்களிடம்குறிப்பிட்டதொகையைபெறுகிறார்.ரூ.12,945,ரூ.43,179, கவுன்சிலிங் பேக்கேஜூகளுக்கு மாதம் ரூ.1.17 லட்சம், டேட்டிங் உத்திகளுக்கு தனி கட்டணம் என பல வகையான பேக்கேஜூகளின் வருமானம் ஈட்டி வருகிறாராம்.

அந்த வகையில் ஆண்டுக்கு தோராயமாக 142 மில்லியன் யுவான் (இந்திய மதிப்பில் ரூ.163 கோடி) சம்பாதிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த தகவல் சமூக வலைதளங்களில் பேசுபொருளாகி உள்ள நிலையில், பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

## டி.கே. சிவக்குமார் மீதான ஊழல் வழக்கை தள்ளுபடி செய்ய சுப்ரீம் கோர்ட்டு மறுப்பு



புதுடெல்லி, ஜூலை 17

கர்நாடக மாநில துணை முதல்மந்திரியாக இருக்கும் டி.கே. சிவக்குமார் வரம்பு மீறி சொத்து சேர்த்ததாக கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ந்தேதி சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தது. 2013 முதல் 2018ம் ஆண்டு வரையிலான அவருடைய வருமானத்தை கணக்கில் கொள்ளும்போது அளவுக்கு அதிகமாக சொத்து சேர்த்தது தெரியவந்தது என சி.பி.ஐ. தெரிவித்தது.

சி.பி.ஐ.யின் இந்த வழக்குப்பதிவை எதிர்த்து டி.கே. சிவக்குமார் 2021ல் கர்நாடக மாநில ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். அதில் சி.பி.ஐ. விசாரணை நடத்த தடைவிதிக்க வேண்டும் என கூறியிருந்தார். இந்த வழக்கை விசாரணை செய்த கர்நாடக மாநில ஐகோர்ட்டு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 19ந் தேதி டி.கே. சிவக்குமார் தாக்குதல் செய்த மனுவை தள்ளுபடி செய்தது.

இதனை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். இந்த நிலையில் நீதிபதிகள் பீலா எம். திரிவேதி, எஸ்.சி. சர்மா அடங்கிய பெஞ்ச் முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிவக்குமார் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள், சிவகுமாருக்கு எதிராக சி.பி.ஐ. பதிவு செய்துள்ள வழக்கு "முற்றிலும் சட்டவிரோதமானது" என்றனர்.

தொடர்ந்து நடந்த விசாரணையில், வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் சிவக்குமாருக்குச் சொந்தமான இடங்களில் இருந்து ரூ. 41 லட்சம் மீட்கப்பட்டதை சுட்டிக்காட்டிய நீதிபதி, வழக்கை ரத்து செய்ய முடியாது என்று தெரிவித்தார். வழக்கை, வருமான வரித்துறை ஏற்கனவே விசாரித்து வரும் நிலையில், அதே குற்றச்சாட்டுக்காக சி.பி.ஐ.யும் ஒரே நேரத்தில் விசாரணையைத் தொடங்க முடியாது என்று அவர் கூறினார். இரண்டும் வெவ்வேறு விசாரணைகள் என தெரிவித்த நீதிபதி திரிவேதி, சி.பி.ஐ. வழக்கை ரத்து செய்வதற்கான வாதங்களை நிராகரித்தார்.

டி.கே.சிவக்குமாருக்கு எதிரான சி.பி.ஐ. வழக்கை ரத்து செய்ய கர்நாடக ஐகோர்ட்டு கடந்த ஆண்டு அக்டோபரில் மறுத்துவிட்ட நிலையில், தற்போது சுப்ரீம்கோர்ட்டும் மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

## கல்வித்துறைக்கு காமராஜர் அளித்த பங்களிப்பு ஈடு இணையற்றது: பிரதமர் மோடி புகழாரம்



டெல்லி, ஜூலை 17

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் பெருந்தலைவர் காமராஜரின் 122வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி, பெருந்தலைவர்காமராஜருக்குபொதுமக்கள், அரசியல் கட்சியினர் புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கல்வித்துறைக்கு காமராஜர் அளித்த பங்களிப்பு ஈடு இணையற்றது என்று பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், காமராஜரின் பிறந்தநாளில் அவருக்கு நினைவஞ்சலி செலுத்துகிறேன்.

அவரது தொலைநோக்கு தலைமை பண்பு மற்றும் ஏழைகளின் வாழ்வை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக அவர் மிகவும் மதிக்கப்படுகிறார். கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு காமராஜர் அளித்த பங்களிப்பு ஈடு இணையற்றது. நீதியும் கருணையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கான காமராஜரின் லட்சியங்களை நிறைவேற்றும் என்ற எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

# காவிரி விவகாரம்: கர்நாடக அரசின் முடிவை ஏற்க முடியாது...முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை 17

காவிரி ஒழுங்காற்று குழு பரிந்துரையின்படி தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடகா அரசு அறிவித்துள்ளது.இந்த விவகாரத்தில் அனைத்து தமிழக சட்டமன்ற கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.அதன்படி, காவிரி நீரைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சட்டமன்ற கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அ.தி. மு.க. சார்பில் எஸ்.பி. வேலுமணி, ஓ.எஸ்.மணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். காங்கிரஸ் சார்பில் செல்வப்பருந்தகை, பா.ஜ.க. சார்பில் கரு. நாகராஜன், கருப்பு முருகானந்தம், பா.ம.க. சார்பில் ஜி.கே.மணி, மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் வேல்முருகன் மற்றும் ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



இந்த கூட்டத்தில் கர்நாடக அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மேலும் இந்த கூட்டத்தில் பேசிய முதல்அமைச்சர் மு.க, ஸ்டாலின்,

கர்நாடக அரசு உரிய நீரை திறந்து விடாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்திற்கு நீரை திறந்து விடாத கர்நாடக அரசின் முடிவை ஏற்க முடியாது.பருவமழை சாதகமாக இருக்கும் நிலையிலும் கர்நாடக அரசின் செயலை ஏற்க முடியாது. என தெரிவித்தார்.

## நில மோசடி வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் கைது

கரூர், ஜூலை 17

அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர்கேரளாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரூர் மாவட்டம் குப்பிச்சிபாளையத்தை சேர்ந்த பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான 100 கோடி ரூபாய் நிலத்தை, அ.தி. மு.க. முன்னாள் அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கர் போலியாக பத்திரப்பதிவு செய்து கொலை மிரட்டல் விடுத்ததாக கரூர் காவல் நிலையம் மற்றும் எஸ்.பி. அலுவலத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக கரூர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர்.



இந்த வழக்கில் முன்ஜாமீன் கோரி அதிமுக முன்னாள் அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கர் கரூர் முதன்மைமாவட்டஅமர்வு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். அந்த மனு தள்ளுபடியானது. பின்னர் இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் அவரது சகோதரர் சேகர் ஆகியோர் முன்ஜாமின் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இது ஒருபக்கம் இருக்க, ஒரு மாதத்திற்கும் மேலாக எம்.ஆர். விஜயபாஸ்கர் தலைமறைவாக இருந்து வருகிறார். இதனால், அவரை கைது செய்ய சிபிசிஐடி போலீசார்தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில் கேரளாவில் வைத்து எம்.ஆர். விஜயபாஸ்கர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரை கரூர் அழைத்து வருவதற்கான சட்ட நடவடிக்கைகளில் சிபிசிஐடி போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

## தமிழ்நாடு அரசு பதில் அளிக்க சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜூலை 17

ஜெயலலிதாவின்மரணம் குறித்து சி பி ஐ விசாரணைக்கு உத்தரவிட கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு பதில் அளிக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரைச் சேர்ந்த அ தி மு க தொண்டர் வக்கீல் ராம்குமார் ஆதித்தன் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில் கூறியிருப்பதாவது:

மறைந்த முதல்அமைச்சர் ஜெயலலிதா கடந்த 2016ம் ஆண்டு செப்டம்பர் 22ம் தேதி காய்ச்சல் மற்றும் நீரிழப்பால் அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அதே ஆண்டு டிசம்பர் 5ம் தேதி இரவு 11 30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்தது.

ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்து ஏராளமான சர்ச்சைகள், சந்தேகங்கள் உள்ளன. அவர் சிகிச்சையின்போது, பொங்கல், இட்லி போன்றவைகளை சாப்பிடுவதாகவும், விரைவில் வீடு திரும்புவார் என்றும் அறிக்கைகள் எல்லாம் வெளியிடப்பட்டது.

அப்பல்லோ ஆஸ்பத்திரி நிர்வாகம் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த அறிக்கை, லண்டன் டாக்டர் ரிச்சர்ட் பீலேவின் மருத்துவ குறிப்புகள் உள்ளிட்டவைகளில், ஜெயலலிதா மூச்சுத்திணறல், சுயநினைவின்று இருந்ததாகவும், நாடித்துடிப்பு, ஆக்சிஜன் அளவு மிகவும் குறைவாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அந்த காலக்கட்டத்தில், ஜெயலலிதாவின் பெயரில் அறிக்கை வெளியிடப்பட்டது. காவிரி நதிநீர் பங்கீடு சம்பந்தமாக அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மற்றும் அமைச்சர்களுடன் ஆலோசனைகூட்டம்நடந்ததாகஅறிவிப்பு வெளியானது. இது எப்படி சாத்தியமானது? என்று தெரியவில்லை.

மருத்துவ ஆவணங்களின்படி, 2016ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி ஜெயலலிதாவின் தொண்டையின் நடுப்பகுதியில் துளையிட்டு அதன் வழியாக குழாயை நுழைத்து நுரையீரலுக்கு பிராணவாயு செலுத்தப்பட்டுள்ளது. அப்போது அவர் மயக்கநிலையில்தான் இருந்து இருப்பார். ஆனால், ஜெயலலிதாவின் பரிந்துரை பேரில் அவர் கவனித்து வந்த துறைகள் ஓ.பன்னீர் செல்வம் கவனிப்பார் என கவர்னர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டது. ஆனால், ஜெயலலிதாவின் கையெழுத்திட்ட கடிதம் வெளியாகவில்லை.

தஞ்சாவூர், அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலில், அரசுக்கு தகவல் தெரிவிக்காமல், வேட்பாளர்கள் அறிவிக்கும் ஆவணத்தில் விரல் ரேகை பதிவு பெறப்பட்டுள்ளது. அப்போது ஜெயலலிதா சுயநினைவில் இல்லை என்று தெரிகிறது.

அதுமட்டுமல்ல, டிசம்பர் 5ம் தேதி இரவு 11 30 மணிக்கு இறந்தார் என்று ஒருபுறம் கூறினாலும், மறுபுறம் அன்று இரவு 7 மணிக்கு புதிய முதல்அமைச்சரை தேர்வு செய்ய அ.தி.மு.க. அலுவலகத்தில் எம் எல் ஏக்கள் ஏன் கூடினார்கள்? என்பதற்கு விளக்கம் இல்லை.

ஆறுமுகசாமி ஆணையத்தில் சாட்சியம் அளித்த டாக்டர் சுதா சேஷய்யன், டிசம்பர் 5ம் தேதி இரவு 10 30 மணிக்கு அப்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் விஜய பாஸ்கர், செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர், தனக்கு போன் செய்து ஜெயலலிதா இறந்து விட்டதாகவும், அவரது உடலை 'எம்பார்மிங்' செய்ய வேண்டும் என்று கூறியதாகவும், இரவு 11.40 மணிக்கு சென்றதாகவும், அதற்கு 10 மணி நேரத்துக்கு முன்பே ஜெயலலிதா இறந்து இருப்பார் என்று கூறியுள்ளார். இவர் சொல்வது உண்மை என்றால், இரவு 11 30 மணிக்கு ஜெயலலிதா இறந்ததாக அப்பல்லோ ஆஸ்பத்திரி பொய் சான்று அளித்துள்ளது என்பது நிரூபணமாகும்.

2012ம் ஆண்டு சசிகலா, தினகரன் உள்பட அவர்களுடைய 11 உறவினர்களை போயஸ்கார்டனில் இருந்து ஜெயலலிதா வெளியேற்றினார். பின்னர் சசிகலாவை மட்டும் மீண்டும் சேர்த்துக்கொண்டார். ஆனால், ஜெயலலிதா சிகிச்சையின்போது, இவர்கள் எல்லோரும் அப்பல்லோ ஆஸ்பத்தியில் தங்கினர். ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக்கை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாலும், ஜெ.தீபாவை ஏன் அனுமதிக்கவில்லை? என்று தெரியவில்லை.

ஜெயலலிதாவை சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அழைத்து செல்ல வேண்டும் என்ற அமெரிக்க டாக்டர்களின் பரிந்துரையை அப்பல்லோ டாக்டர் ஆப்ரகாம், அப்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் விஜய பாஸ்கர் ஆகியோர் நிராகரித்து உள்ளார்கள்.

ஜெயலலிதாவுக்கு நீரிழிவு இருந்தும். அவருக்கு கட்டுப்பாடின்றி உணவுகள் அளிக்கப்பட்டிருப்பதாக ஆறுமுகசாமி ஆணைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதுமட்டுமல்ல, ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் பீலே, ஆறுமுகசாமி ஆணையத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க மறுத்து விட்டார்.

அ தி மு க நிர்வாகி திண்டுக்கல் சீனிவாசன், ஜெயலலிதாவின் மரணம் குறித்து பொய்தான் சொன்னோம். மன்னித்து விடுங்கள் என்று பேசியுள்ளார். ஜெயலலிதா மாலை 4 30 மணிக்கு இறந்ததாக தகவல் வந்ததாக கூறிய ஓ.பன்னீர்செல்வம், அதுகுறித்து விசாரணை ஆணையத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. மொத்தத்தில், ஜெயலலிதாவின் சாவில் உள்ள மர்மங்கள் வெளியாகவில்லை. அதனால், இது குறித்து சி பி ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன், நீதிபதி முகமதுசபீக் ஆகியோர், இந்த வழக்கிற்கு தமிழ்நாடு அரசு 2 வாரத்துக்குள் பதில் மனு தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டனர்.

# போலீஸ் ஏட்டு தூக்குப்போட்டு தற்கொலை

நாமக்கல், ஜூலை 17

சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியை சேர்ந்த ராமசாமி மகன் செல்வராஜ் (வயது 47). இவர் பள்ளிபாளையம் போலீஸ் நிலையத்தில் போலீஸ் ஏட்டாக பணிபுரிந்து வந்துள்ளார்.

இவரது மனைவி ரேணுகாதேவி. இவர் ராசிபுரம் போலீஸ் நிலையத்தில் பணிபுரிந்தார். இவர்களுக்கு கிரண்குமார் (19) என்ற மகனும், ஜனனி(17) என்ற மகளும் உள்ளனர். செல்வராஜ் தனது குடும்பத்துடன் ராசிபுரத்தில் வசித்து வந்தார்.

கடந்த 2018ம் ஆண்டு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ரேணுகா தேவி இறந்து விட்டார். இதனால் செல்வராஜ் மன வேதனையில் இருந்து வந்து உள்ளார். இதையடுத்து செல்வராஜ் திருச்செங்கோடு அருகே எளையாம்பாளையத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில், வீட்டின் மின்விசிறியில் சேலையால் செல்வராஜ் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.அதைகண்டுஅதிர்ச்சி அடைந்த அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்குசிகிச்சைக்காக கொண்டு சென்றனர். ஆனால் அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே செல்வராஜ் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த திருச்செங்கோடு ரூரல் போலீசார், செல்வராஜ் உடலை கைப்பற்றி அதே ஆஸ்பத்திரியில்பிரேதபரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனைக்கு பிறகு செல்வராஜ் உடல் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சம்பவம் பற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்த மேலும் ஒருவர் சாவு: பலி எண்ணிக்கை 67 ஆக உயர்வு

கள்ளக்குறிச்சி, ஜூலை 17

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி, சேஷசமுத்திரம் ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் 19ந் தேதி விஷ சாராயம் குடித்து 229 பேர்பாதிக்கப்பட்டனர். இவர்கள் சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும்,புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் சிகிச்சை பலனின்றி 6 பெண்கள் உள்பட 66 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 161 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியிருந்த நிலையில் 2 பேர் மட்டும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில்சிகிச்சைபெற்று வந்தனர்.



இந்த நிலையில் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கருணாபுரம் திருவரங்கம் நகரை சேர்ந்த கண்ணன் (வயது 72) என்பவர் நேற்று மதியம் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதன் மூலம் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்தது. தற்போது புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஒருவர் மட்டும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# மின் கட்டணம் உயர்வு: எவ்வளவு யூனிட்டுக்கு எவ்வளவு கட்டணம்?



சென்னை, ஜூலை 17

தமிழ்நாடு மின்வாரியத்தின் கீழ் வீடுகள், வணிகநிறுவனங்கள், தொழிற்சாலைகள் என 3 கோடிக்கும் மேற்பட்ட மின் இணைப்புகள் உள்ளன. இந்த இணைப்புகளுக்கு வழங்கப்படும் மின் சாரத்துக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும் கட்டணத்தை மின்வாரியம் வசூலித்து வருகிறது.

இந்தநிலையில் மின்கட்டணத்தை யூனிட்டுக்கு 20 பைசா முதல் 55 பைசா வரை உயர்த்தி மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நேற்று இரவு அறிவித்தது. இந்த புதிய மின் கட்டண உயர்வு கடந்த 1ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்விவரம் வருமாறு:

★ 400 யூனிட் வரை உள்ள வீட்டு பயன்பாடு மின்கட்டணம், இதுவரை ஒரு யூனிட்டுக்கு ரூ,4.60 ஆக இருந்தது. தற்போது 20பைசாஉயர்ந்து, ரூ,4.80 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 401 முதல் 500 வரையிலான யூனிட் பயன்படுத்துவோருக்கு, ஒரு யூனிட்டுக்கு ரூ,6.15 ஆக இருந்த கட்டணம், தற்போது 30 பைசா உயர்ந்து, ரூ,6.45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 501 முதல் 600 வரையிலான யூனிட் பயன்படுத்துவோருக்கு, ஒரு யூனிட்டுக்கு ரூ,8.15 ஆக இருந்த கட்டணம், தற்போது 40 பைசா உயர்ந்து, ரூ,8.55 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 601 முதல் 800 வரையிலான யூனிட் பயன்படுத்துவோருக்கு, ஒரு யூனிட்டுக்கு ரூ,9.20 ஆக இருந்தது. தற்போது 45 பைசா உயர்ந்து, ரூ,9.65 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 801 முதல் 1,000 வரையிலான யூனிட் பயன்படுத்துவோருக்கு, ஒரு யூனிட்டுக்கு ரூ,10.20 ஆக இருந்தது. தற்போது 50 பைசா உயர்ந்து, ரூ,10.70 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

★ 1,000 யூனிட்களுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு இதுவரை யூனிட்டுக்கு ரூ,11.25 கட்டணமாக வசூலிக்கப்பட்டு வந்தது. தற்போது 55 பைசா உயர்ந்து, ரூ,11.80 ஆக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

★ அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான மின் கட்டணம் ரூ,8.15ல் இருந்து ரூ,8.55 ஆக உயர்ந்துள்ளது.

★ கிராம பஞ்சாயத்துக் குட்பட்ட குடிசைகள், தாட்கோ நிறுவனங்களுக்கு மின் கட்டணம் ரூ,9.35ல் இருந்து ரூ,9.80 ஆக உயர்ந்திருக்கிறது.

★ ரெயில்வே மற்றும் ராணுவ குடியிருப்புகளுக்கான மின் கட்டணம் ரூ,8.15ல் இருந்து ரூ,8.55 ஆக உயர்ந்திருக்கிறது.

★ குடிசை மற்றும் குறு நிறுவன மின் கட்டணம் 500 கிலோ வாட்டுக்கு மேல் ஒரு யூனிட்டுக்கு ரூ,6.95 ஆக உயர்ந்திருக்கிறது.

★ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், அரசு மருத்துவமனைகளுக்கான மின் கட்டணம் ரூ,8.15ல் இருந்து ரூ,8.55 ஆக உயர்ந்திருக்கிறது.

★ தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்கான 500 கிலோ வாட்டுக்கு மேல் ஒரு யூனிட்டுக்கு ரூ,8.70ல் இருந்து ரூ,9.10 ஆக உயர்ந்திருக்கிறது.

★ விசைத்தறிகளுக்கு மின்கட்டணம் 500 கிலோ வாட்டுக்கு மேல் ஒரு யூனிட்டுக்கு ரூ,7.65ல் இருந்து ரூ,8 ஆக உயர்ந்திருக்கிறது.

★ தொழில், ஐ டி நிறுவனங்களுக்கான மின் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூ,7.65ல் இருந்து ரூ,8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ வேளாண், அரசு விதை பண்ணைகளுக்கான மின் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூ,4.60ல் இருந்து ரூ,4.80 ஆக உயர்ந்திருக்கிறது.

★ கட்டுமான பணிகளுக்கான மின்சார கட்டணம் ஒரு கிலோ வாட்டுக்கு ரூ,12.25ல் இருந்து ரூ,12.85 ஆக உயர்ந்திருக்கிறது. மேற்கண்டவாறு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. வீடுகளுக்கான 100 யூனிட்டுகள் வரையும், குடிசைகளுக்கான இலவச மின்சாரம் வழங்குவதும் தொடரும் என மின்சார வாரியம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உல்லாசத்திற்கு இடையூறு: கள்ளக்காதலனை வீட்டுக்கு வரவழைத்து கணவரை தீர்த்துக் கட்டிய மனைவி



கோவை, ஜூலை 17

கோவை அருகே கள்ளக்காதலனை வீட்டுக்கு வரவழைத்து கணவரை தீர்த்துக் கட்டிய மனைவியை போலீசார் கைது செய்தனர். மேலும் கள்ளக்காதலனும் கைது செய்யப்பட்டார்.

கோவை வடவள்ளி அருகே உள்ள காளப்பநாயக்கன்பாளையம் பிரிவை சேர்ந்தவர்பிரபு(வயது40), லேத் ஒர்க் ஷாப் தொழிலாளி. இவருடைய மனைவி லாவண்யா(33). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

உடல் நலக்குறைவு காரணமாக அந்த பகுதியில் உள்ள ஆஸ்பத்திரியில் பிரபு சிகிச்சை பெற்று வந்தார். இந்தநிலையில் நேற்று முன்தினம் வீட்டில் பிரபு பிணமாக கிடந்தார். அவரது கழுத்தில் ரத்த காயங்கள் இருந்தன.

அவரது சாவில் சந்தேகம் இருப்பதாக பிரபுவின் தாயார் கொடுத்த புகாரின் பேரில் வடவள்ளி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதில் பிரபு கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் பிரபுவின் மனைவி லாவண்யாவை சந்தேகத்தின்பேரில் பிடித்து விசாரணை நடத்தினர். அப்போது வெளியான திடுக்கிடும் தகவல்கள் வருமாறு: பிரபுவின் மனைவி லாவண்யா அந்த பகுதியில் டிபன் கடை நடத்தி வந்தார். அவரது கடைக்கு கோவை தனியார் நிறுவனத்தில் தொழிலாளியாக வேலை பார்க்கும் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த பைரேகவுடா(39) என்பவர் சாப்பிட வந்து சென்றார். அப்போது அவருக்கும், லாவண்யாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியது. அவர்கள் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசமாக இருந்து வந்தனர். இவர்களின் கள்ளத்தொடர்பு விவகாரம் பிரபுக்கு தெரியவந்தது. இதையடுத்து பிரபு அவர்களை கண்டித்ததார். இதனால் ஆத்திரமடைந்த லாவண்யா கணவரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தார். இதற்காக கடந்த சில நாட்களுக்கு முன்பு உணவில் விஷம் கலந்து கொடுத்ததாக தெரிகிறது. ஆனால் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு பின்னர் பிரபு உயிர் பிழைத்ததும் வீட்டில் ஓய்வு எடுத்து வந்தார்.

இதற்கிடையில் உல்லாசத்திற்கு இடையூராக இருக்கும் கணவரை தீர்த்துக்கட்டும் முடிவில் உறுதியாக இருந்த லாவண்யா மீண்டும் கள்ளக்காதலனுடன் சேர்த்து திட்டம் தீட்டினார். வீட்டில் யாரும் இல்லாத நேர்த்தில் லாவண்யா கள்ளக்காதலனுக்கு தகவல் கொடுத்தார். அங்கு வந்த பைரேகவுடா பிரபுவின் கழுத்தை துண்டால் இறுக்கி கொலை செய்துவிட்டு தப்பிச்சென்றுவிட்டார்.

பின்னர் லாவண்யா எதுவும் தெரியாததுபோல நோயால் கணவர் இறந்துவிட்டதாக கூறி நாடகமாடி நீலி கண்ணீர் வடித்துள்ளார். போலீசாரின் கிடுக்கிப்பிடி விசாரணையில் கள்ளக்காதலனுடன் சேர்ந்துகணவரைகொலை செய்ததை அவர் ஒப்புக்கொண்டார். அவரையும், கள்ளக்காதலன்பைரேகவுடாவையும் போலீசார் கைது செய்தனர்.

# மனைவியை கொடூரமாக கொன்ற தொழிலாளி

தென்காசி ஜூலை 17

தென்காசி சொர்ணபுரம் தெருவைச் சேர்ந்தவர் மஸ்தான் (வயது 48). 2 கால்களும் செயல்படாத மாற்றுத்திறனாளியான இவர்ஒரு பர்னிச்சர் கடையில் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி பாத்திமா (40). இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். மகளுக்கு திருமணமாகிவிட்டது.

மஸ்தான் தென்காசி கிராம நிர்வாக அதிகாரி சுரேஷ் முன்னிலையில் சரண் அடைந்து, தனது மனைவியை கொலை செய்துவிட்டதாக கூறினார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் தென்காசி போலீசில் புகார் செய்தார். இதையடுத்து போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அப்போது, வீட்டில் பாத்திமா கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தார். அவரது உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தென்காசி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மஸ்தானை கைது செய்து தீவிர விசாரணை நடத்தினர்.

அதில், பாத்திமாவின் நடத்தையில் நீண்ட நாட்களாக மஸ்தான் சந்தேகப்பட்டு உள்ளார். வேறு யாருடனும் அவருக்கு தொடர்பு இருக்கும் என்று எண்ணியுள்ளார். இதனால் கணவன்மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு உள்ளது.



இதுதொடர்பாக கடந்த 1 மாதத்திற்கு முன் மஸ்தான் தனது மனைவி மீது தென்காசி அனைத்து மகளிர்போலீஸ்நிலையத்தில் புகார் செய்துள்ளார். போலீசார் 2 பேரையும் அழைத்து சமரசம் செய்து அனுப்பி வைத்துள்ளனர். ஆனாலும் பாத்திமாதனது நடவடிக்கைகளை மாற்றவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் மஸ்தான் தனது மனைவி மீது ஆத்திரத்தில் இருந்து வந்துள்ளார். மஸ்தான் தனது மனைவிக்கு பரோட்டா வாங்கிக்கொடுத்துள்ளார். அப்போது குருமாவில் தூக்க மாத்திரைகளை அதிக அளவில் கலந்து கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதனால் சாப்பிட்ட உடன் பாத்திமா நன்றாக தூங்கிவிட்டார். நள்ளிரவில் பாத்திமாவின் கை, கால்களை மஸ்தான் கட்டினார். பின்னர் சேலையால் தனது மனைவியின் கழுத்தை இறுக்கி கொடூரமாக கொலை செய்துள்ளார். மேலும் விடியும் வரை தனது மனைவி உடல் அருகில் அமர்ந்து உள்ளார். பின்னர் கிராம நிர்வாக அதிகாரியிடம் சரண் அடைந்துள்ளார்.

மேலும் போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# ரவுடிகளை கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கை அமைச்சர் ரகுபதி

புதுக்கோட்டை, ஜூலை 17

தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி புதுக்கோட்டையில் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

ரவுடிகளை கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆம்ஸ்ட்ராங் கொலை சம்பவத்தில் கண்காணிப்பு கேமரா காட்சி பதிவுகள் வெளியாகியுள்ளன. இந்த சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட குற்றவாளிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் திருவேங்கடம் தப்பியோட முயன்றபோது என்கவுண்ட்டர் நடந்துள்ளது. ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை நாங்கள் மாறுபட்ட கோணத்தில் பார்ப்பது கிடையாது.

அடையாளம் தெரிந்த உண்மை குற்றவாளிகளை கண்டுபிடித்திருக்கிறோம். இந்த சம்பவத்தில் சதி செயல் எதுவும் இருக்கிறதா?

என்பது புலனாய்வில் தான் தெரியவரும். காவிரியில் உரிய தண்ணீரை கர்நாடக அரசு திறக்க தீர்ப்பாயத்திடம் வலியுறுத்துவோம். 2 மாநிலங்களுக்கு இடையே பிரச்சினை என்றால் மத்திய அரசுதான் மத்தியஸ்தம் காண வேண்டும். அதனால் காவிரியில் இருந்து தமிழகத்திற்கு உரிய தண்ணீரை பெற்று தர மத்திய அரசுக்கும் பங்கு இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சி பெண் கவுன்சிலர் வீட்டில் ஆயுதங்களுடன் பதுங்கி இருந்த 4 பேர் கைது



தஞ்சாவூர், ஜூலை 17

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பகுதியை சேர்ந்தவர் அலெக்ஸ். இவரது மனைவி ரூபின்ஷா. விடுதலை சிறுத்தைகள் கட்சி பிரமுகரானஇவர், கும்பகோணம் மாநகராட்சி 24வது வார்டு கவுன்சிலராக உள்ளார்.

அலெக்ஸ் வீட்டில் கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் பதுக்கி வைத்திருப்பதாக கும்பகோணம் மேற்கு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அலெக்சின் மனைவி மாநகராட்சி கவுன்சிலராக உள்ளதால் அவரது வீட்டில் சோதனை செய்வதற்காக அனுமதி வேண்டி கும்பகோணம் கோர்ட்டில் போலீசார் மனு தாக்கல் செய்திருந்தனர். இதற்கு கோர்ட்டு அனுமதி அளித்தது.

இதைத்தொடர்ந்து கும்பகோணம் மேற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெகதீசன் தலைமையில் 10க்கும் மேற்பட்ட போலீசார் அலெக்ஸ் வீட்டில் சோதனை நடத்தினர். இந்த சோதனையின் போது வீட்டில் உள்ள ஒரு அறையில் கட்டிலுக்கு அடியில் சிலர் பதுங்கி இருப்பது போலீசாருக்கு தெரிய வந்தது. அவர்களை போலீசார் சுற்றி வளைத்து பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில்அவர்கள்கெயில் ஆண்டனி(வயது22), அர்னால்டு ஆண்டனி(23), அருண்குமார்(21), பால்சாமி(23) ஆகிய 4 பேர்என்பதும், இவர்கள் 4 பேரும் கொலை முயற்சி வழக்கில் தேடப்பட்டு வந்த நிலையில்அவர்கள்இங்கு வந்து பதுங்கி இருந்ததும் தெரியவந்தது. அவர்களை போலீசார் கைது செய்தனர்.

தொடர்ந்து போலீசார் கட்டிலுக்கு அடியில் சோதனை செய்தபோது அங்கு 10க்கும் மேற்பட்ட கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் பதுக்கி வைத்திருந்ததும் தெரியவந்தது. இதனையடுத்து பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ஆயுதங்களை போலீசார்பறிமுதல் செய்தனர். இதுகுறித்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# விஷம் குடித்து கல்லூரி மாணவர் தற்கொலை: ஊர் சுற்றியதை பெற்றோர் கண்டித்ததால் விபரீதம்

திருத்தணி, ஜூலை 17

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஒன்றியம் சத்திரஞ்ஜெயபுரம் ஊராட்சி முஸ்லிம் நகர் பகுதியைச் சேர்ந்தவர் அக்மல் (வயது 20). இவர் திருத்தணி அரசு கலைக் கல்லூரியில் பி. எஸ்சி., இயற்பியல் 2ம் ஆண்டு படித்து வந்துள்ளார். கடந்த சில தினங்களாக அக்மல் கல்லூரிக்கு செல்லாமல் தனது நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றி வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 11ம் தேதி கல்லூரிக்கு செல்லாமல் வீட்டில் இருந்த அக்மலை பெற்றோர் கண்டித்ததாக கூறப்படுகிறது. இதனால் மன உளைச்சலில் இருந்த அக்மல் தாழவேடு பகுதியில் உள்ள மாந்தோப்பில் விவசாய நிலங்களுக்கு அடிக்க பயன்படுத்தும் பூச்சி மருந்தினை (விஷம்) குடித்துவிட்டு மயங்கி கிடந்து உள்ளார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அக்மலை அருகில் இருந்தவர்கள் மீட்டு திருத்தணி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் சென்னை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். இதுகுறித்து திருத்தணி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கல்லூரிக்கு செல்லாமல் சுற்றியதை பெற்றோர் கண்டித்ததால் கல்லூரி மாணவன் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# 16 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த போலீஸ்காரர்



மயிலாடுதுறை, ஜூலை 17

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையை சேர்ந்தவர் திருநாவுக்கரசு(வயது 34). இவர், மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா பெரம்பூர் போலீஸ் நிலையத்தில் போலீஸ்காரராக பணியாற்றி வருகிறார். இவருக்கு திருமணம் ஆகி மனைவியும், 3 மகன்களும் உள்ளனர்.

மனைவி, குழந்தைகள் சொந்த ஊரில் வசித்து வரும் நிலையில் திருநாவுக்கரசுபெரம்பூரில்உள்ள போலீஸ் குடியிருப்பில் வசித்து வருகிறார். இவருக்கும், போலீஸ் குடியிருப்புக்கு அருகே வசிக்கும் ஒருவருக்கும் இடையே நட்பு ஏற்பட்டுள்ளது. இருவரும் மொபைல் போனில் அடிக்கடி பேசி வந்துள்ளனர்.

இந்த நிலையில் திருநாவுக்கரசுக்கும், நண்பரின் மகளான சிறுமிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து கடந்த 8ந் தேதி நண்பரின் மகளான 16 வயது சிறுமியை போலீஸ் குடியிருப்புக்கு வரவழைத்த திருநாவுக்கரசு அவரை வலுக்கட்டாயமாக பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து மாவட்ட உதவி மையத்துக்கு வந்த புகாரின் அடிப்படையில் மயிலாடுதுறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக சமூகப் பணியாளர் ஆரோக்கியராஜ், பெண் உதவியாளருடன் பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டிற்கு சென்று விசாரணை நடத்தினார். தொடர்ந்து விசாரணையின் அடிப்படையில் ஆரோக்கியராஜ், பெரம்பூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து திருநாவுக்கரசை கைது செய்து நாகை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

முன்னதாக இந்த சம்பவம் குறித்து அறிந்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மீனா, பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான போலீஸ்காரர் திருநாவுக்கரசை பணியிடை நீக்கம் செய்தார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருப்பூர்: வேலைக்கு செல்வதாக கடிதம் எழுதி வைத்துவிட்டு மாணவிகள் மாயம்

திருப்பூர், ஜூலை 17

திருப்பூர்மாவட்டம் மங்கலம் அருகே சாமளாபுரம் பகுதியை சேர்ந்த 15 வயது மாணவிகள் 2 பேர் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி தேர்ச்சி பெறவில்லை. இதையடுத்து சமீபத்தில் மறு தேர்வை எழுதியதாக கூறப்படுகிறது. இதே போல் 13 வயது மாணவி ஒருவர் 8ம் வகுப்பும் படித்து வருகிறார். இவர்கள் 3 பேரும் தோழிகளாக பழகி வந்துள்ளனர். இதில் 10ம் வகுப்பு மறுதேர்வு எழுதிய மாணவியும், 8ம் வகுப்பு படிக்கும் மாணவியும் சகோதரிகள் ஆவார்கள்.

இந்த நிலையில் மாணவிகளின் பெற்றோர் நேற்று காலையில் வேலைக்கு சென்றுவிட்டு மதியம் சாப்பிட வீட்டிற்கு வந்தனர். அப்போது வீட்டில் மாணவிகளை காணவில்லை. அக்கம் பக்கத்தில் தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதனால் பதற்றம் அடைந்த பெற்றோர் என்ன செய்வது என்று அறியாமல் உறவினர்களின் வீடுகள், தோழிகளின் வீடுகளுக்கு சென்று உள்ளார்களா? என்று விசாரித்தனர். அப்போது அவர்கள் அங்கும் செல்லவில்லை என்று தெரியவந்தது.

இதற்கிடையில் மாணவிகள் எழுதி வைத்திருந்த கடிதம் ஒன்று பெற்றோருக்கு கிடைத்தது. அந்த கடிதத்தில் "நான், தங்கை, என் பிரண்ட் மூவரும் சென்னைக்கு போகிறோம்.எங்களை தேட வேண்டாம்" என அதில் எழுதப்பட்டிருந்தது.

மற்றொரு மாணவி வீட்டில் எழுதி வைத்த கடிதத்தில் " எல்லோரும் மன்னிக்கவும், நான் சென்னைக்கு வேலைக்கு போறேன்.

உங்ககிட்ட சொன்னா விடமாட்டீங்க. பிரண்ட் கூட வர்ராங்க. துணிக்கடையில்வேலை.ரூ.3,500 சம்பளம். தேடி அலையவேண்டாம். நானே வந்திருவேன். சின்ன புள்ளைய (சகோதரி) கூட்டீட்டு போறேன். ஸ்கூல் போக மாட்டாள். எங்கூட வந்தா அவளும் வேலை கத்துக்குவா. தீபாவளிக்கு வந்துருவேன். அப்படியே பால் டெக்னிக் படிக்கிறேன். யாரும் தேட வேண்டாம். எல்லாரும் என்னை மன்னிச்சிடுங்க" இவ்வாறு அந்த கடிதத்தில் எழுதியிருந்தது.

இதையடுத்து மங்கலம் போலீசில் மாணவிகளின் பெற்றோர் புகார் கொடுத்தனர். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

சென்னைக்கு செல்வதாக கடிதம் எழுதி வைத்துவிட்டு தனது சகோதரி மற்றும்தோழியுடன்மொத்தம் 3 பேர் காணாமல் போன சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கொலுசு... அலறல் சத்தத்துடன் உலா வரும் உருவம்: பொதுமக்கள் அச்சம்

ஆரணி, ஜூலை 17

ஆரணி பாளையம் டவுன் பகுதியை சேர்ந்தவர் பாலாஜி (வயது 35).

இவர், சொந்த வேலை காரணமாக தச்சூருக்கு சென்ற பின்னர், அங்கு வேலை முடிந்ததும், தனது பைக்கில் வீடு திரும்பி கொண்டிருந்தார். அப்போது நள்ளிரவு 12 மணிக்கு வடுகசாத்து ஏரிக்கரை அருகே வந்தபோது திடீரென கொலுசு சத்தம் கேட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த வாலிபர் பைக்கை நிறுத்தி என்ஜினை அணைத்தார்.

இந்நிலையில், பெண் ஒருவர் கதறி அழும் அலறல் சத்தம் கேட்டுள்ளது. இதனால், மேலும் பதட்டமான பாலாஜி, என்ஜினை 'ஆன்' செய்து முகப்பு விளக்கை ஒளிரவிட்டார்.



அப்போது, 50 அடி தொலைவில் நின்றிருந்த ஒரு இளம் பெண் உருவம் 'வா' என சைகை காண்பித்து அவரை அழைத்துள்ளது. இதனால் பயந்துபோன அவர், பைக்கை வேகமாக திருப்பி வந்த வழியே திரும்பினார்.

பின்னர், சில அடி தூரம் சென்றதும் மீண்டும் திரும்பி பார்த்தபோது, அந்த பெண் உருவம் வானில் மாயமாகி விட்டதாக கூறப்படுகிறது.

இந்த காட்சிகளை, பாலாஜி தனது செல்போனில் வீடியோ பதிவு செய்து, வாட்ஸ்ஆப், உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பதிவிட்டார். இந்த வீடியோ தற்போது வேகமாக பரவி வருகிறது.

# செல்போனில் ஆபாச புகைப்படங்கள்: கல்யாண ராணி விரித்த வலையில் சிக்கியவர்கள் எத்தனை பேர்?

திருப்பூர், ஜூலை 17

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை சேர்ந்த பேக்கரி உரிமையாளரை ஏமாற்றி திருமணம் செய்ததாக ஈரோடு மாவட்டம்கொடுமுடியை சேர்ந்த இளம்பெண் சத்யாவை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவரை பல்லடம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

முன்னதாக சத்யாவிடம் போலீசார் விசாரணை நடத்தியபோது கரூர் மாவட்டம் தாந்தோன்றி மலையை சேர்ந்த தமிழ்ச்செல்வி என்பவர்தான் புரோக்கராக செயல்பட்டது தெரியவந்தது. இதையடுத்து தலைமறைவாக உள்ள தமிழ்ச்செல்வியை போலீசார் தேடி வருகிறார்கள். சத்யாவிடம் தொடர் விசாரணையில் கிடைத்த தகவல் குறித்து போலீசார் கூறியதாவது:

திருமணம் நடைபெற்ற 2 நாளில் சத்யாவின் செல்போனை அவரது புதுக்கணவர் பார்த்துள்ளார். அப்போது அதில் இருந்த புகைப்படங்கள் அவரை தலை சுற்ற வைத்துள்ளது. அதில் சத்யா பல ஆண்களுடன் மிக நெருக்கமாக இருக்கும் ஆபாச புகைப்படங்கள் அவரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இவர்கள் எல்லாம் யார்? என்று கேட்டபோது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போதுதான்சத்யாவின் சுயரூபம் தெரிந்து அவரை போலீஸ் நிலையம் அழைத்து சென்று விசாரிக்கும்படி புதுமாப்பிள்ளை விட்டுள்ளார். இவ்வாறு விசாரணையில் தெரிய வந்ததாக போலீசார் தெரிவித்தனர்.





இந்த நிலையில் மருத்துவ பரிசோதனைக்காக தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு சத்யாவை போலீசார் அழைத்து வந்தனர். அப்போது சத்யா கூறும்போது " என் குடும்பத்தைபற்றிதவறாக எழுதாதீர்கள். என் தந்தை தற்கொலை செய்து விட்டார் என்றெல்லாம் சிலர் எழுதிவிட்டார்கள். இதைவிட வேறென்ன இருக்கு சொல்லவும் செய்யவும்? காசு உள்ளவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என நிரூபித்துவிட்டார்கள். நான் வெளியே வந்த பின் என் மீது தவறில்லை என நிரூபிக்கும் எல்லா ஆதாரங்களையும் காட்டுகிறேன்" என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

புரோக்கராக செயல்பட்ட தமிழ்ச்செல்வியை கண்டுபிடித்தால்தான் இதுவரை சத்யாவை எத்தனை பேருக்கு திருமணம் செய்து வைத்தார் என்ற விவரம் தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

# முத்தமிழ் முருகன் மாநாடு கால அவகாசம் நீடிப்புஅமைச்சர் பி.கே.சேகர்பாபு

சென்னை, ஜூலை 17

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் ஆகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெற உள்ளது.

இம்மாநாட்டில் பங்கேற்கவும், ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவும் https://muthamizhmurugan maanadu2024.com/ என்ற தனி இணையதளம் தொடங்கப்பட்டு, மாநாட்டில் பங்கேற்க விரும்பும் முருகபக்தர்கள்15.7.2024 ம் தேதிக்குள்ளும், ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 10.7.2024ம் தேதிக்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.



இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்து 1,003 ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு, அவற்றை பரிசீலிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் மாநாட்டில் பங்கேற்பதற்கு பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை நீட்டித்து வழங்கிட வேண்டுமென பல்வேறு தரப்பினரிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அனைத்துலக முத்தமிழ் முருகன்மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு முடிவுகளின்படி பங்கேற்பாளர்கள்பதிவு செய்வதற்கான கால அவகாசம் ஆகஸ்ட் 15ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மாநாட்டில் பங்கேற்க விரும்பும் முருக பக்தர்கள் மற்றும் இறையன்பர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர்கூறி உள்ளார்.

# முக்கிய துறைகளின் செயலாளர்கள், 10 மாவட்ட கலெக்டர்கள் மாற்றம்

சென்னை, ஜூலை 17

தமிழகம் முழுவதும் 10 மாவட்ட கலெக்டர்களை மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

★ தமிழக உள்துறை செயலாளராக இருந்த அமுதா வருவாய்த்துறை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ தமிழக உள்துறை செயலாளராக தீரஜ் குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ★ சென்னை மாநகராட்சி ஆணையராக இருந்த ராதாகிருஷ்ணன் கூட்டுறவு மற்றும் உணவுத்துறை செயலாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ சென்னைமாநகராட்சி புதிய ஆணையராக குமரகுருபரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ தொழிலாளர் நலத்துறை செயலாளராக வீரராகவ ராவ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ கால்நடை மற்றும் மீன்வளத்துறை செயலாளராக கோபால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ ராணிப்பேட்டை கலெக்டராக சந்திரகலா ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை செயலாளராக மதுமதியை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியராக எம்.அருணா ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ★ தகவல் தொழில்நுட்பத்துறை



செயலாளராக குமார் ஜெயந்த் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ நீலகிரி மாவட்ட கலெக்டராக லட்சுமி பவ்யா தன்னேரு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ தஞ்சை மாவட்ட கலெக்டராக பிரியங்கா நியமனம் செய்யப்பட்டுள்ளார். ★ நாகை மாவட்ட கலெக்டராக ஆகாஸ் ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ அரியலூர் மாவட்ட கலெக்டராக ரத்தினசாமி ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ கடலூர் மாவட்ட கலெக்டராகசிபி ஆதித்யா செந்தில்குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ கன்னியாகுமரி கலெக்டராக அழகுமீனா ஐஏஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ ராமநாதபுரம்மாவட்ட கலெக்டராக சிம்ரன்ஜீத் சிங் கலோன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# அ.தி.மு.க. சார்பில் 22ந்தேதி ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூலை 17

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. ஆட்சியில், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 26 ஊராட்சிகளும், அதேபோல் மண்ணச்சநல்லூர், லால்குடி, திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச்சேர்ந்த பல ஊராட்சிகளையும், பொதுமக்களின் கருத்துகளைக் கேட்காமலும், பொதுமக்களை பாதிக்கும் வகையிலும், திருச்சி மாநகராட்சியுடன் இணைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிய வருகின்றன.



ஊராட்சிகள் மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டால், மத்திய அரசில் இருந்து இவ்வசதிகள் தங்களுக்கு கிடைக்காமல் போய்விடும் என மக்கள் அச்சப்படுகின்றனர்.

பொதுமக்களை பாதிக்கும் வகையில்திருச்சி மாநகராட்சியுடன் இணைப்பதற்கு திட்டமிட்டுள்ள தி.மு.க. அரசைக் கண்டித்தும், ஏழை, எளிய மக்களின் நலன் கருதி இத்திட்டத்தைக் கைவிட வலியுறுத்தியும், திருச்சி புறநகர் வடக்கு, திருச்சி புறநகர் தெற்கு, திருச்சி மாநகர் ஆகிய மாவட்ட அ.தி.மு.க.சார்பில், 22ந்தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில், ஸ்ரீரங்கம் தொகுதி, அல்லித்துறை அண்ணா திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

முன்னாள் அமைச்சர்கள் பி. தங்கமணி, டாக்டர் விஜயபாஸ்கர், ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# மின்கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும் ஓ.பன்னீர் செல்வம் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 17

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மாதம் ஒரு முறை மின் கணக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இதன்மூலம் 1,000 யூனிட்டுக்குகுறைவாகமின்சாரம் பயன்படுத்துவோர் ஆண்டுக்கு 6,000 ரூபாய் வரை பயனடையலாம் என்றும் தி.மு.க. தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது.

ஆட்சிப் பொறுப்பேற்று 3 ஆண்டுகளாகியும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மாறாக, அனைத்து பயனீட்டாளர்களுக்குமான மின் கட்டணத்தை பன்மடங்கு தி.மு.க. அரசு உயர்த்தியது. இதனால், ஏழைஎளிய, நடுத்தர மக்கள் கூடுதல் சுமையை சுமக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.



இந்தச் சுமையிலிருந்து பொது மக்கள் மீண்டு வருவதற்குள்ளாக, மேலும் ஒரு நிதிச் சுமை அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வினை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மது ஒழிப்பை வலியுறுத்தி முட்டி போட்டு போராட்டத்தில் ஈடுபட்ட ஓட்டல் ஊழியர்

நெல்லை: ஜூலை 17

நெல்லை சந்திப்பு ரெயில் நிலையம் முன்பு காமராஜர் சிலை அமைந்துள்ளது. இன்று காலை சிலை முன்பு திடீரென கருப்பு உடை அணிந்த நபர் ஒருவர் கையில் மதுவை ஒழிப்போம் என்ற வாசகங்களைதமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் விழிப்புணர்வு பதாகை ஒன்றை ஏந்தி முட்டி போட்டு திடீர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனால் ரெயில் நிலையம் முன்பு திடீர் பரபரப்பு ஏற்பட்டது. நெல்லை சந்திப்பு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து அவரை அனுமதி இல்லாமல் போராட்டம் நடத்தக்கூடாது என அங்கிருந்து கலைந்து செல்ல அறிவுறுத்தியபோதுமதுஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து அனுமதி இல்லாமல் போராட்டம் நடத்தியதாக அவரை போலீசார் கைது செய்து அழைத்து சென்றனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், போராட்டத்தில் ஈடுபட்ட நபர் நெல்லை மாவட்டம் குறிச்சிக்குளம் பகுதியை சேர்ந்த யோவான் என்பதும், இவர் ரெயில்வே பீடர் சாலையில் அமைந்துள்ள தனியார் ஓட்டலில் பணி புரிவதும் தெரியவந்துள்ளது.




மது போதையால் பல குடும்பங்கள் சீரழிவதை பொறுக்க முடியாமல் இந்த போராட்டத்தில் ஈடுபட்டதாக போலீசாரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

# சாக்லேட் வாங்கி தருவதாக கூறி சிறுமி பாலியல் பலாத்காரம்: தொழிலாளிக்கு ஆயுள் தண்டனை

கோவை ஜூலை 17

கோவை போத்தனூர் பகுதியைச் சேர்ந்தவர் செல்வராஜ் என்ற வெள்ளையன் (வயது 54). கூலி தொழிலாளி. இவர் தனது வீட்டின் அருகில் விளையாடிக்கொண்டு இருந்த 9 வயது சிறுமிக்கு சாக்லெட் வாங்கித்தருவதாக கூறி, வீட்டுக்கு அழைத்துச் சென்று பலமுறை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இந்த சம்பவம் 2017ம் ஆண்டு நடைபெற்றுள்ளது.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமி பள்ளி ஆசிரியையிடம் கூறியதை அடுத்து, குழந்தைகள் நல அமைப்புக்கு ஆசிரியை தகவல் தெரிவித்தார். பின்னர் குழந்தைகள் நல அமைப்பினர் அனைத்து மகளிர் போலீசில் அளித்த புகாரின்பேரில் தொழிலாளி செல்வராஜ் மீது போக்சோ சட்டப்பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை கோவை போக்சோ சிறப்பு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணை முடிந்ததை தொடர்ந்து தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதில் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த தொழிலாளி செல்வராஜுக்கு ஆயுள் தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## சித்தார்த் நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு பூஜை




நடிகர் சித்தார்த் இயக்குனர் ஷங்கர் இயக்கிய 'பாய்ஸ்' திரைப்படம் மூலம் கதாநாயகனாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமாகினார். பின்னர் மணி ரத்னம் இயக்கத்தில் வெளிவந்த 'ஆயுத எழுத்து' திரைப்படத்தின் மூலம் மக்கள் மனதை கவர்ந்தார். நடிகர், தயாரிப்பாளர் என இரண்டு துறைகளில் கவனம் செலுத்தி வருகிறார் சித்தார்த்.

இவர் தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட மொழி படங்களிலும் பணியாற்றி வருகிறார். சித்தார்த் நடிப்பில் கடந்த ஆண்டு சித்தா திரைப்படம் வெளியானது. நடிகர் சித்தார்த் இந்த படத்தில் புதிய பரிமாணத்தில் நடித்திருந்த நிலையில் இப்படம் மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது.

அதைத்தொடர்ந்து கமல்ஹாசன், சங்கர் கூட்டணியில் கடந்த ஜூலை 12ம் தேதி வெளியான இந்தியன் 2 திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் சித்தார்த். அதேசமயம் மிஸ் யூ என்ற திரைப்படத்தையும் கைவசம் வைத்துள்ளார். இந்நிலையில் அடுத்ததாக நடிகர் சித்தார்த், எட்டு தோட்டாக்கள், குருதி ஆட்டம் உள்ளிட்ட படங்களின் இயக்குனர் ஸ்ரீ கணேஷ் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிப்பதற்கு கமிட் ஆகியுள்ளார்.

சித்தார்த்தின் 40 ஆவது படமாக உருவாகும் இந்த படத்தில் சித்தார்த்துடன் இணைந்து சரத்குமார் , தேவயானி, மீதா ரகுநாத், சைத்ரா ஆச்சார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

சிவகார்த்திகேயனின் மாவீரன் திரைப்படத்தை தயாரித்த சாந்தி டாக்கீஸ் நிறுவனம் இந்த படத்தை தயாரிக்கிறது. ஏற்கனவே இந்த படம் தொடர்பான அறிவிப்பு வெளியான நிலையில் தற்போது இந்த படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

## திருமணத்திற்கு பிறகு மீண்டும் சினிமாவில் இணைந்த மீதா ரகுநாத்



'முதல் நீ முடிவும் நீ' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கவனம் ஈர்த்த நடிகை மீதா ரகுநாத். அதன் பின்னர் சென்ற ஆண்டு நடிகர் மணிகண்டனுடன் நடித்த 'குட் நைட்' திரைப்படம் மூலம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் ஈர்த்தார்.

இந்த படத்தில் அழகான, எளிமையான நடிப்பை வெளிப்படுத்திய மீதா ரகுநாத், இப்படிப்பட்ட மனைவி வேண்டும் என இணையவாசிகள் போட்டி போட்டுக் கொண்டு பதிவிடும் வகையில், இந்தப் படத்தின் மூலம் பிரபலமானார்.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் மீதா ரகுநாத்தின் நிச்சயதார்த்தம் சொந்த ஊரான ஊட்டியில் நடைபெற்றது. இதையடுத்து, மீதா ரகுநாத்தின் திருமணம் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கணவருடன் எடுத்த திருமணப் புகைப்படங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்நிலையில், திருமணத்திற்கு பிறகு மீண்டும் சினிமாவில் இணைந்துள்ளார். அதன்படி, சித்தார்த்தின் 40வது படத்தில் காதாநாயகியாக மீதா ரகுநாத் நடிக்க உள்ளார். இந்தப்படத்தினை சாந்தி டாக்கீஸ் நிறுவனம் தயாரிக்கிறது. எட்டு தோட்டாக்கள், குருதி ஆட்டம் படங்களை இயக்கிய ஸ்ரீ கணேஷ் இப்படத்தினை இயக்குகிறார்.

## சரத்குமார் நடித்துள்ள 'ஆபரேஷன் ராஹத்' டீசர் வெளியானது




தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களுள் ஒருவர் சரத்குமார். இதுவரை 100ம் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார், கடந்த ஆண்டு வெளியான பொன்னியின் செல்வன், போர் தொழில், பரம் பொருள் ஆகிய திரைப்படத்தின் நடித்ததன் மூலம் சரத் குமாருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

கடந்த மாதம் வெளியான ஹிட் லிஸ்ட் திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். அடுத்தடுத்து போலீஸ் கதாபாத்திரத்தில் கமிட் ஆகி நடித்து வருகிறார். கடந்த ஆண்டு இவரது 150 வது படமான 'தி ஸ்மைல் மேன்' என்ற படத்தில் ஒப்பந்தமானார்.

இந்நிலையில் சமீபத்தில் சரத்குமாரின் மகள் வரலட்சுமி திருமணம் நடத்து முடிந்தது. கடந்த ஜூலை 3ம் தேதி சென்னையில் உள்ள லீலா பேலஸில் பிரம்மாண்டமாக நடைபெற்ற திருமண வரவேற்பு விழா நிகழ்ச்சியில் ஒட்டுமொத்த தென்னிந்திய திரையுலக பிரபலங்கள் பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

இந்நிலையில் மேஜர் ரவி இயக்கத்தில் சரத் குமார் முக்கிய வேடத்தில் நடித்துள்ள படம் "ஆபரேஷன் ராஹத்". கே கிருஷ்ணகுமார் எழுதிய, இந்த பான் இந்திய திரைப்படத்தை பிரசிடென்ஷியல் மூவிஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் தயாரித்துள்ளது. தயாரிப்பு குழுவில் மேஜர் ரவியின் மகன் அர்ஜுன் ரவி ஒளிப்பதிவாளராகவும், ரஞ்சின் ராஜ் இசையமைப்பாளராகவும், டான் மேக்ஸ் எடிட்டராகவும் உள்ளனர்.

இந்நிலையில் படத்தின் டீசர் வெளியாகி சமூகவலை தளங்களில் வைரலாகி வருகிறது. இது குறித்து நடிகர் சரத்குமார் தனது எக்ஸ் தளபதிவில் கூறியிருப்பதாவது, "உங்கள் வாழ்த்துக் குழுவிற்கு நன்றி... "ஆபரேஷன் ராஹத்" இந்த சிறந்த படத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் மகிழ்ச்சி" என்றும் தெரிவித்துள்ளார்,

## தொடர்ந்து ஓடிடி தளத்தில் முன்னிலையில் இருக்கும் 'மகாராஜா'



இயக்குனர் நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடித்த 'மகாராஜா' திரைப்படம் கடந்த மாதம் 14ம் தேதி வெளியானது. விஜய் சேதுபதியின் 50வது படமாக உருவான இது, ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களிடையே பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. இந்தபடத்தில்அனுராக்காஷ்யப், மம்தாமோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி. எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

படத்திற்குக் கிடைத்த பெரிய வரவேற்பால் பல திரையரங்குகளில் மகாராஜாவுக்கான காட்சிகள் அதிகப்படுத்தப்பட்டன. இந்த நிலையில், 'மகாராஜா' திரைப்படம் ரூ. 100 கோடிக்கும் மேல் வசூலை கடந்துள்ளது என படக்குழு அறிவித்தது.

அதனைத்தொடர்ந்து, இந்த படம் கடந்த 12ம் தேதி தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியானது.

அப்பாமகள் பாசத்தை சொல்லும் படமாக வெளியான மகாராஜா படத்தை திரையரங்குகளில் சென்று பார்க்க முடியாத ரசிகர்கள், தற்போது ஓடிடியில் பார்க்க மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த படத்தின் கதைக்களம் யூகிக்க முடியாத அளவில் இருந்ததாக ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

மிகப்பெரிய அளவில் ரசிகர்களை கவர்ந்து வரும் இந்தப்படம் நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் தொடர்ந்து டிரெண்டிங்கில் முதலிடத்தில் உள்ளது.



## 3வது குழந்தைக்கு பெயர் சூட்டிய சிவகார்த்திகேயன் வீடியோ வெளியீடு

நடிகர் சிவகார்த்திகேயன் சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்து தன்னுடைய கடின உழைப்பால் முன்னேறி வருகிறார். இவர் சினிமாவில் நுழையும் முன்பே திருமணம் செய்துகொண்டார். தன்னுடைய சொந்த மாமா பொண்ணான ஆர்த்தியைதான் சிவகார்த்திகேயன் திருமணம் செய்துகொண்டார்.

இவர்களுக்கு கடந்த 2013ம் ஆண்டு முதல் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையின் பெயர் ஆராதனா. ஆராதனா தன்னுடைய 5 வயதிலேயே சினிமாவில் 'கனா' படத்தில் 'வாயாடி பெத்த புள்ள' பாடலை பாடி இருக்கிறார். தற்போது ஆராதனாவுக்கு 11 வயது ஆகிறது.

2021ம் ஆண்டு பிறந்த 2வது குழந்தைக்கு குகன் தாஸ் என பெயரிட்டுள்ளனர். அவரை சிவகார்த்திகேயனின் ரசிகர்கள் செல்லமாக குட்டி எஸ்.கே. என அழைத்து வருகின்றனர். தற்போது குகன் தாஸுக்கு 3 வயது ஆகிறது.

சிவகார்த்திகேயன் ஆர்த்தி ஜோடிக்கு கடந்த மாதம் 2ந் தேதி 3வது குழந்தை பிறந்தது. இதுகுறித்த தகவல்களை சிவகார்த்திகேயன் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து கொண்டார்.

தற்போது, சிவகார்த்திகேயன் தனது 3வது குழந்தைக்கு 'பவன்' என்று பெயர் சூட்டியுள்ளார். மேலும், பெயர் சூட்டு விழாவில் எடுத்த வீடியோவை தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: ஸ்பெயின் வரலாற்று சாதனை



17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி (யூரோ) ஜெர்மனியில் கடந்த ஒரு மாதம் நடந்தது. இதில் தலைநகர் பெர்லினில் உள்ள ஒலிம்பியா ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த இறுதி ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் ஸ்பெயின் அணி, இங்கிலாந்தை எதிர்கொண்டது.

பரபரப்பாக அரங்கேறிய இந்த ஆட்டத்தில் ஸ்பெயின் அணி 21 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியதுடன், ரூ,256 கோடியை பரிசாக அள்ளியது.

ஸ்பெயின் அணி ஐரோப்பிய சாம்பியன்ஷிப்பை வசப்படுத்துவது இது 4வது முறையாகும். ஏற்கனவே 1964, 2008, 2012 ஆகிய ஆண்டுகளில் பட்டத்தை வென்றிருந்தது. இதன் மூலம் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் கோப்பையை அதிக முறை வென்ற அணி என்ற வரலாற்றை ஸ்பெயின் படைத்தது. ஜெர்மனி அணி 3 முறை வென்று அடுத்த இடத்தில் உள்ளது.

நடப்பு ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்பில் மொத்தம் 51 ஆட்டங்களில் 117 கோல்கள் பதிவாகின. இதில் 10 கோல் சுயகோலாகும். அணிகளில் ஸ்பெயின் மொத்தம் 15 கோல் போட்டு முதலிடம் பிடித்தது. இதன் மூலம் யூரோ கால்பந்து தொடர் ஒன்றில் அதிக கோல் அடித்த அணி என்ற வரலாற்று பெருமையை பெற்றது. இதற்கு முன்பு 1984ம் ஆண்டு தொடரில் பிரான்ஸ் 14 கோல் அடித்ததே அதிகபட்சமாக இருந்தது.

## இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர்கள் மீது போலீசில் புகார்... என்ன நடந்தது..?




இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு இருந்தார். அதில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர்களான அவரும், சக வீரர்கள் யுவராஜ்சிங், சுரேஷ் ரெய்னாவும் குனிந்து கால்களை பிடித்தபடி ஆடிய நடனமும், உடல் அசைவுகளும் மாற்றுத்திறனாளிகளை கிண்டல் செய்யும் வகையில் இருப்பதாக சர்ச்சை கிளப்பி இருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்ட அவர்கள்மீது நடவடிக்கைஎடுக்கக் கோரி மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பை நடத்தி வரும் அர்மான் அலி என்பவர் டெல்லி போலீசில் புகார்அளித்தார். இதனையடுத்து டெல்லி போலீசார் வழக்கு பதிந்துள்ளனர்.

இதற்கிடையே அந்த வீடியோவை நீக்கிய ஹர்பன்சிங் தனது எக்ஸ் பதிவில், 'யாருடையை மனதை புண்படுத்தும் நோக்கில் அந்த வீடியோவை வெளியிடவில்லை. நாங்கள் ஒவ்வொரு தனிநபர் மற்றும் சமூகத்தை மதிக்கிறோம். மூத்தோர் கிரிக்கெட் சாம்பியன்ஷிப்பில் தொடர்ந்து 15 நாட்கள் விளையாடியதால் எங்களது உடல்நிலை எந்த அளவுக்கு சோர்ந்து போயிருக்கும் என்பதை பிரதிபலிக்கும் வகையிலேயே இந்த வீடியோவை வெளியிட்டோம். இதனால் யாருடைய மனதையும் காயப்படுத்தி இருந்தால் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்' என்று பதிவிட்டுள்ளார்.

## கில் உங்களை சதமடிக்க விடவில்லையா..? ரசிகரின் கேள்விக்கு ஜெய்ஸ்வால் பதில்



சுப்மன் கில் தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இந்திய கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேவுக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடியது. இந்த தொடரை 41 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றி அசத்தியது.

முன்னதாக இந்த தொடரின் 4வது போட்டியில் கேப்டன் சுப்மன் கில்லின் செயல்பாடு ரசிகர்களிடையே விமர்சனத்தை ஏற்படுத்தியது. அந்த போட்டியில் அதிரடியாக விளையாடிய ஜெய்ஸ்வால் 83 ரன்களில் இருந்தபோது இந்தியா வெற்றி பெற 23 ரன்கள் தேவைப்பட்டது. அப்போது அவரை சதமடிக்க விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட கில் அதை செய்யாமல் ஸ்ட்ரைக்கை தன் பக்கமே வைத்து தன்னுடைய அரை சதத்தை பூர்த்தி செய்து கொண்டார். அதனால் கில் மிகவும் சுயநலமாக செயல்படுவதாக ரசிகர்கள் சமூக வலைதளங்களில் விமர்சித்தனர்.

இந்நிலையில் 4வது போட்டியில் கில் உங்களை சதமடிக்கவிடவில்லையா? என்று ஒரு ரசிகர் நேரடியாகவே ஜெய்ஸ்வாலிடம் கேட்டார். அதற்கு அவர் கொடுத்த பதில் பின்வருமாறு: "சுப்மன் கில்லுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் விளையாடிய அனுபவம் நன்றாக இருந்தது. இந்தியாவுக்காக நான் விளையாடும் போதெல்லாம் அதை பெருமையாக உணர்வேன். அந்தப் போட்டியில் நாங்கள் பினிஷிங் செய்து அணிக்காக வெற்றியை பெற்றுக் கொடுப்பதை பற்றி சிந்தித்தோம். அதனால் விக்கெட் இழப்பின்றி இந்தியாவை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணம் மட்டுமே எங்களுடைய மனதில் இருந்தது" என்று கூறினார்.




## பாரீஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன்: 'சி'பிரிவில் சாத்விக் சிராக்

33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வருகிற 26ம் தேதி தொடங்குகிறது. இதில் பேட்மிண்டன் போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவினருக்கான அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது. இந்த பிரிவில் பங்கேற்கும் 17 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி முன்னாள் நம்பர் 1 இணையான இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டிசிராக் ஷெட்டி கூட்டணி எளிதான 'சி' பிரிவில் இடம் பிடித்துள்ளது. அந்த பிரிவில் உலகதரவரிசையில் 6வது இடத்தில் உள்ள பாஜர் அல்பியான்முகமது ரியான் அட்ரியான்டோ (இந்தோனேசியா), 31வது இடத்தில் இருக்கும் மார்க் லாம்பஸ்மார்வின் சிடெல் (ஜெர்மனி), 43வது இடத்தில் உள்ள லூகாஸ் கார்வீரோனன் லாபர் (பிரான்ஸ்) ஜோடியும் இடம்பெற்றுள்ளன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் ஜோடிகள் காலிறுதிக்கு தகுதி பெறும்.



**எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும்**

**விளக்கம்:**
எவ்வளவு கொடிய பகை உடையவரும் தப்பி வாழ முடியும், ஆனால் தீயவை செய்தால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் பின் சென்று வருத்தும்.

**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
**94436 99066**
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.